## அக்டோபர் – 13 – வெள்ளி

### புனித எட்வேட்

**“உலகிற்கு அவர் நீதியான தீர்ப்பு வழங்குவார்“ – தி.பா 9 : 8**

**முதல் வாசகம் : யோவேல் 1 : 13 – 15 2 : 1 - 2**

குருக்களே, சாக்கு உடை உடுத்திக்கொண்டு தேம்பி அழுங்கள் பலிபீடத்தில் பணிபுரிவோரே! அலறிப் புலம்புங்கள் என் கடவுளின் ஊழியர்களே, சாக்கு உடை அணிந்தவர்களாய் இரவைக் கழியுங்கள் ஏனெனில், உங்கள் கடவுளின் வீட்டில் தானியப் படையலும் நீர்மப் படையலும் இல்லாமற் போயின.உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள் வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள் ஊர்ப் பெரியோரையும் நாட்டில் குடியிருப்போர் அனைவரையும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்தில் கூடிவரச் செய்யுங்கள் ஆண்டவரை நோக்கிக் கதறுங்கள்.மிகக் கொடிய நாள் அந்த நாள்! ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது எல்லாம் வல்லவர் அழிவை அனுப்பும் நாளாக அது வரும். சீயோனிலே எக்காளம் ஊதி எச்சரியுங்கள் என்னுடைய திரு மலைமேலிருந்து கூக்குரலிடுங்கள் நாட்டில் குடியிருப்பவர்கள் அனைவரும் நடுங்குவார்களாக! ஏனெனில், ஆண்டவரின் நாள் வருகின்றது, ஆம் அது வந்து விட்டது.அதுவோ இருளும் காரிருளும் கவிந்த நாள் மப்பும் மந்தாரமும் சூழ்ந்த நாள் விடியற்காலை ஒளி மலைகள்மேல் பரவுவதுபோல் ஆற்றல்மிகு, வெட்டுக்கிளிகளின் பெருங்கூட்டம் வருகின்றது இதுபோன்று என்றுமே நிகழ்ந்ததில்லை இனிமேல் தலைமுறை தலைமுறைக்கும் நிகழப்போவதுமில்லை.

**பதில்பாடல்:** உலகிற்கு ஆண்டவர் நீதியான தீர்ப்பு வழங்குவார்

**நற்செய்தி : லூக்கா 11 : 15 – 26**

அக்காலத்தில் மக்களுள் சிலர இயேசுவைக்குறித்து, ”பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்” என்றனர். வேறு சிலர் அவரைச் சோதிக்கும் நோக்குடன், வானத்திலிருந்து ஏதேனும் ஓர் அடையாளம் காட்டுமாறு அவரிடம் கேட்டனர். இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து, அவர்களிடம் கூறியது: ”தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப்போகும். அவ்வாறே பிளவுபடும் வீடும் விழுந்துவிடும். சாத்தானும் தனக்கு எதிராகத் தானே பிளவுபட்டுப் போனால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்? பெயல்செபூலைக் கொண்டு நான் பேய்களை ஓட்டுகிறேன் என்கிறீர்களே. நான் பெயல்செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக்கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்? ஆகவே அவர்களே உங்கள் கூற்று தவறு என்பதற்குச் சாட்சிகள். நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா! வலியவர் ஆயதம் தாங்கித் தம் அரண்மனையைக் காக்கிறபோது அவருடைய உடைமைகள் பாதுகாப்பாக இருக்கும். அவரைவிட மிகுந்த வலிமையுடையவர் ஒருவர் வந்து அவரை வென்றால் அவர் நம்பியிருந்த எல்லாப் படைக் கலங்களையும் பறித்துக் கொண்டு, கொள்ளைப் பொருளையும் பங்கிடுவார். ”என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார் என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறச் செய்கிறார். ”ஒருவரைவிட்டு வெளியேறுகின்ற தீய ஆவி வறண்ட இடங்களில் அலைந்து திரிந்து இளைப்பாற இடம்தேடும். இடம் கண்டுபிடிக்க முடியாமல், ”நான் விட்டுவந்த எனது வீட்டுக்குத் திரும்பிப் போவேன்” எனச் சொல்லும். திரும்பி வந்து அவ்வீடு கூட்டி அழகு படுத்தப்பட்டிருப்பதைக் காணும். மீண்டும் சென்று தன்னைவிடப் பொல்லாத வேறு ஏழு ஆவிகளை அழைத்து வந்து அவருள் புகுந்து அங்கே குடியிருக்கும். அவருடைய பின்னைய நிலைமை முன்னைய நிலைமையை விடக் கேடுள்ளதாகும்.”என்றார்.

**தியானம்:** மனிதனின் சிந்தனை ஒன்று இறைவனின் திட்டம் வேறொன்று. இன்றைய நற்செய்தியை நாம் மேலோட்டமாகப் பார்க்கும் போது இறைமகன் இயேசு பெயேல் செபூலையும் அசுத்த ஆவிகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றார் எனக்கருதலாம். மாறாக, நற்செய்தியை ஆழமாக உற்றுநோக்கின் எத்தனை தப்பான போதனைகள் எம்மத்தியில் பரப்பப்பட்டாலும், நாம் அன்னையாம் திருச்சபையை விட்டு விலகாமல் நிலைத்து நிற்கவேண்டும் என்று உணர்த்துகின்றது. ஏனெனில் இறைமகன் இயேசு “பாறை” பேதுருவின்மேல் ஆரம்பித்த திருச்சபையை விட்டுப்பிரிந்து நாம் பிளவுபட்டுப் போவோமாயின், “தனக்கெதிராக தானே பிளவுபட்ட அரசுபோன்று” நாமும் நிலைத்து நிற்கமாட்டோம். வீழ்ந்து மடிவோம் என்ற உண்மையும் தெளிவாகின்றது. பரம திரித்துவத்தில் தந்தை, மகன், தூய ஆவி எவ்வாறு இணைந்துள்ளார்களோ, அவ்வாறே நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் அன்னையாம் திருச்சபையில் இணைந்திருத்தல் வேண்டும். இறைமகன் இயேசுவிலே நாம் நிலைத்திருப்போமாயின் ஆண்டவரின் நாள் நெருங்கி வரும்போது நாம் சிதறிப்போகமாட்டோம். சத்துருவானவன் வலிமை மிகு எப்படையோடு வந்தாலும் வலியவரான ஆண்டவர் ஆயுதம் தாங்கி எம்மைக் காப்பார். எம்மத்தியில் பிளவுகள், பிரிவினைகள் உருவாக்கவென எத்தனையோ சக்திகள் முயலுவதனை நாம் அறியாதவர்கள் அல்ல. அன்று இறைமகனில் பிழை பிடித்த கூட்டம் இன்றும் அன்னையாம் திருச்சபையிலும், அன்னை மரியாளிலும் பிழை பிடிக்கின்ற காலமிது. இறைமகன் கிறிஸ்துவாலே “நீ பாறையாய் இருக்கிறாய், இப்பாறையின் மேல் எனது திருச்சபையைக் கட்டுவேன்” என்று கட்டியெழுப்பப்பட்ட அன்னையாம் திருச்சபையில் நாமும் உறுப்பினர் என்ற உறுதிப்பாட்டை நிலைநாட்டுவோம். கத்தோலிக்க திருச்சபைக்கும், புனித கன்னி மரி அன்னைக்கும் எதிராக பரப்பப்படும் போலி பிரச்சாரங்களை முறியடிப்போம். ஏனெனில் “என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார். என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கிறார்” என்ற இறை வார்த்தை சொன்னதைச் செய்யாமல் திரும்பாது”.